# எதென்ஸ்

www.athenstownship.ca



எதென்ஸ் நகர்ப்பகுதி இந்தப் பிராந்தியத்தின் மையப்பகுதியில் முக்கியமான ஓர் இடமாகும். ஏரிகளுக்கும் குடிசை வாசஸ்தலங்களுக்கும் இது புகழ்பெற்றது. இந்தப் பகுதியின் வளமான வரலாற்றைப் பிரதிபலித்து நிற்கின்ற 11 வர்ணச் சுவர் சித்திரங்களைக் கொண்டிருக்கும் இடமாக இது உள்ளது. சார்ல்ஸ்ரன் ஏரி (Charleston Lake) இந்தப் பிரதேசத்தின் அணிகலன் போன்ற பகுதியெனக் கருதப்படுகின்றது. கண்கவரும் அழகு, பிரத்தியேகமான சுற்றாடல்,அமைதி என்பவற்றுக்கு இது பெயர் பெற்றது. இங்குள்ள சார்ல்ஸ்டன் கிராமம் ஏரியைப் பார்த்தவாறு இருப்பதுடன், எல்லைப்புறத்தின் இரு பக்கங்களிலும் படகு வைத்திருப்பவர்களும் மீன்பிடித்தொழிலாளர்களும் நாடி வருகின்ற ஓரிடமாக உள்ளது. இங்கு எதென்ஸில் ஒவ்வொரு வருடமும் கோர்ண்பெஸ்ற் மற்றும் பார்மஸ்வில் ஸ்ரிம்(Cornfest and Farmersville Steam) களியாட்டங்கள் கொண்டாடப்படுகின்றன. தீபங்களின் பவனி (Parade of Lights) டிசம்பர் மாதத்தின் முதல்வார இறுதியில் நிகழும் சிறப்பான ஒரு நிகழ்வாகும். வாணவேடிக்கைக் களியாட்டம் யூலை மாத ஆரம்பத்தில் நடைபெறும் ஒரு கோடை கால நிகழ்வாகும். சார்ல்ஸ்டன் ஏரி றெகாற்றா படகுப் போட்டி ஓகஸ்ட் மாதம் வரும் நீண்ட வார இறுதியில் நடைபெறும்.

இந்த எதென்ஸ் நகர்ப் பகுதியில் மக்கள் பெருமளவான ஒரு சமூகத்தில் உள்ள சகல பொது வசதிகளையும் பெற்று வாழுகின்றனர். ஆனால் இதில் ஒரு சிறு நகரச் சூழல் காணப்படுகின்றது. இங்கு வலிமையான விவசாய நடவடிக்கைளும் நிறைந்து இருக்கின்றன. இந்த அயல்புறத்தில் அடங்கியுள்ள வியாபார நிலையங்களில் சில இவையாகும்: ஜி. ரக்காபெரி அன்ட் சன்ஸ் கொன்ஸ்ட்ரக்ஷன் லிமிற்றட், ஆர்.ஏ. ஹொவ்வார்ட் பஸ் சேர்விசஸ் லிமிற்றட், நொலேஜ் புலோ கோர்ப், மக்கன் பில்டிங் சேர்விசஸ் லிமிற்றட் மற்றும் வில்லாட்ஸ் பேக்கரி புரொடக்ட்ஸ் (G. Tackaberry and Sons Construction Ltd, R.A. Howard Bus Service Ltd., Knowledge Flow Corp., McCann Building Services Ltd. and Willard's Bakery Products).

மொத்தச் சனத்தொகை: 3,118 (2011 Census)
ஜனவரி மாதச் சராசரி வெப்பநிலை: -8 $^{0}$C (27 $^{0}$F)
யூலை மாதச் சராசரி வெப்பநிலை: 26 $^{0}$C (70 $^{0}$F)
வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி: 784 mm மழை, 198 cm பனி
தனியொருவர் வருமானம்: $56,079
சராசரி வீட்டு வருமானம்: $73,411
சராசரித் தொழிலின்மை வீதம்: 6.4 %
உயர் பாடசாலைக் கல்வி பெற்ற வயதுவந்தவர்கள்: 960
கல்லூரி அல்லது பல்கலைக்கழக டிப்புளோமாப் பட்டம் பெற்ற வயதுவந்தவர்கள்: 908
2 படுக்கை அறைகள் அடங்கிய அடுக்குமாடி வதிவிடத்தின் சராசரி மாதாந்த வாடகைச் செலவு: $650 to $750
சராசரி 3 படுக்கையறை விலகியிருப்பதாக மாளிகை: $241,371




மேலதிகத் தகவல்கள்:
Darlene Noonan, பிரதான நிருவாக உத்தியோகத்தர்
எதென்ஸ் நகர்ப்பகுதி
1 Main Street, Athens, Ontario, KOE 1B0 Canada
613-924-2044 / Athens@ripnet.com

Leeds Grenville — where lifestyle grows good business
www.leedsgrenville.com

Leeds & Grenville IMMIGRATION PARTNERSHIP
www.NewcomersInfo.ca